● முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தால் 90 சதவிகித குழந்தைகளின் நினைவாற்றல் அதிகரிப்பு!

● புதுமைப் பெண் திட்டத்தால் கல்லூரிகளில் சேர்க்கை விகிதம் அதிகரித்துள்ளது!

# முதல்வர் மு.க.ஸ்டாலினின் சீரிய திட்டங்கள் குறித்து மாநில திட்டக்குழு ஆய்வறிக்கை!

## ‘எண்ணும் எழுத்தும் திட்டம்’ மாணவர்கள் குறித்த நேரத்தில் கற்பதற்கு வழிவகுத்துள்ளது!

சென்னை,டிச.17-

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சீரிய திட்டங்கள் குறித்து மாநில திட்டக்குழு ஆய்வறிக்கை வெளியிட்டுள்ளது. “முதலமைச்சரின் காலை உணவு” திட்டத்தினால் 90% மேற்பட்ட குழந்தைகளிடம் நினைவாற்றல் அதிகரிப்பு! “புதுமைப்பெண்” திட்டத்தால் விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் 27.6 % விவசாயம் அல்லாத குடும்பங்களைச் சார்ந்தவர்கள் 39.3 % கல்லூரிகளில் சேர்ந்துள்ளனர்! “எண்ணும் எழுத்தும் திட்டம்” மாணவர்கள் குறித்த நேரத்தில் கற்பதற்கு வழிவகுத்துள்ளது!**

தமிழ்நாடு மாநில திட்டக்குழு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தியுள்ள “முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்”,”புதுமைப்பெண் திட்டம்” “எண்ணும் எழுத்தும் திட்டம்” முதலான சீரிய திட்டங்கள் குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளித்துள்ளது.

இந்த அறிக்கையின் மூலம், முதலமைச்சர் அவர்களின் இந்த சீரிய திட்டங்கள் மக்களிடையே பெருத்த வரவேற்பைப் பெற்றுள்ள விவரங்கள் தெரியவருகின்றன.

### முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்.

காலை உணவுத் திட்டத்தை முதன் முதலில் - மதுரை மாநகரில் ஆதிமூலம் நகராட்சிப் பள்ளியில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான 15.9.2022 அன்று தொடங்கிவைக்கப்பட்டது.

அன்றைய நாளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் 1,545 அரசுத் தொடக்கப் பள்ளிகளைச் பள்ளிகளைச் சேர்ந்த 1 இலட்சத்து 14 ஆயிரம் குழந்தைகள் பயன்பெற்றனர்.




இத்திட்டத்திற்கு மக்களிடையே ஏற்பட்ட வரவேற்பினையும், மாணவ மாணவியர் இடையே ஏற்பட்ட எழுச்சியினையும் கருத்தில் கொண்டு 25.8.2023 அன்று முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் பிறந்த ஊராகிய திருக்குவளை மண்ணில் இத்திட்டம் அனைத்து 30 ஆயிரத்து 992 அரசுத் தொடக்கப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டு 18 இலட்சத்து 50 ஆயிரம் குழந்தைகள் பயன்பெற்றனர்.

அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளும் பயன்பெறும் வகையில் காலை உணவுத் திட்டம் திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் புனித அன்னாள் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளான 15.7.2024 முதல் விரிவுபடுத்தப்பட்டது. அதன் மூலம் 3,995 அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 2 இலட்சத்து 23 ஆயிரத்து 536 குழந்தைகள் கூடுதலாகப் பயன்பெற்றனர்.

அந்நாள் முதல் 34 ஆயிரத்து 987 அரசுத் தொடக்கப்பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களுமாக மொத்தம் 20 இலட்சத்து 73 ஆயிரத்து 536 குழந்தைகள் நாள்தோறும் காலை உணவைச் சூடாகவும் சுவையாகவும் உண்டு மகிழ்ச்சியோடு பள்ளிப் பாடங்களில் கவனம் செலுத்திப் படித்து வந்தனர். தாய்மார்கள் தங்களுடைய குழந்தைகள் காலையில் பசியாற உண்டு படிப்பில் கவனம் செலுத்துவதைக் கண்டு பெருமிதம் கொண்டு இந்த அரசைப் பாராட்டிக் கொண்டுள்ளனர்.

”உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே” - என்னும் மணிமேகலை காப்பியம் கூறுவதற்கு ஏற்ப இந்நாட்டிற்கு மட்டுமின்றி, உலகத்திற்கே முன்னோடியாக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்படுகிறது..

மாநிலத் திட்டக் குழுவின் மூலம் காலை உணவுத் திட்டம் குறித்து தமிழ்நாடு முழுவதும் நகரப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலுமாக 5,410 குழந்தைகள் கொண்ட 100 பள்ளிகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டன.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினால், பள்ளிகளுக்கு குழந்தைகள் குறித்த நேரத்தில் வருவது அதிகரித்துள்ளது.

குழந்தைகளிடம் கற்றல் ஆர்வம், வகுப்பறைக் கவனிப்பு, விளையாட்டில் ஈடுபாடு முதலியவற்றில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

90 சதவீதத்திற்கும் மேற்பட்ட குழந்தைகளிடம் முந்தைய பாடங்களை நினைவுகூரும் திறன் அதிகரித்துள்ளது. குழந்தைகளிடம் கையெழுத்து, வாசித்தல், பேசும் திறன் ஆகியவை மேம்பட்டுள்ளன என்ற விவரங்கள் தெரியவந்துள்ளன.

தாய்மார்கள் தங்கள் வீட்டில் காலை உணவைத் தவிர்த்து வந்த தங்கள் குழந்தைகள் பள்ளிகளில் காலை உணவை விரும்பி உண்பதால் தங்களுடைய கவலை அகன்றதாகத் தெரிவித்துள்ளனர்.

### புதுமைப்பெண் திட்டம்

அரசுமேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 12-ஆம் வகுப்பு வரை படித்து உயர்கல்வியில் சேரும் மாணவிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கும் புதுமைப் பெண் திட்டத்தினை சென்னை பாரதியார் மகளிர் கல்லூரியில் 5.9.2022 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

இத்திட்டத்தின் மூலம் வழக்கமாகக் கல்லூரிகளில் சேரும் மாணவிகளைவிட ஆண்டுக்கு ஆண்டு கூடுதலாகக் கல்லூரிகளில் சேர்ந்து மகளிர் பயன் பெறுகின்றனர்.



புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் 2022-2023 ஆம் நிதியாண்டில் 2,09,365 மாணவியர்கள் பயனடைந்து வந்த நிலையில், 2023-2024-ஆம் நிதியாண்டில் சுமார் 64,231 மாணவிகள் கூடுதலாக இணைந்து 2,73,596 மாணவியர்கள் பயனடைந்துள்ளனர் என்பதே இத்திட்டத்தின் வெற்றிக்கு அடையாளமாகும். புதுமைப் பெண் திட்டம் தொடங்கப்பட்டது முதல் தற்போது வரை சுமார் 3,28,280 மாணவியர்கள் பயனடைந்துள்ளனர். இச்சிறப்பு வாய்ந்த திட்டமானது 2024-2025-ஆம் கல்வியாண்டு முதல் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் கல்வி பயின்று உயர்கல்வியில் சேரும் மாணவிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.




### தமிழ்ப் புதல்வன் திட்டம்

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையின்படி, அரசு உதவி பெறும் பள்ளிகளில் படித்து உயர்கல்வியில் சேரும் மாணவிகளுக்கு 1,000 ரூபாய் வழங்கப்படுவது போல, “அரசுப் பள்ளிகளில் பயின்ற, ஏழை எளிய மாணவர்களைச் சாதனையாளர்களாக உருவாக்கிடவும், அரசுப் பள்ளி மாணவரின் உயர்கல்விச் சேர்க்கையை உயர்த்திடவும் தமிழ்ப் புதல்வன் எனும் ஒரு மாபெரும் திட்டம் 9.8.2024 அன்று கோவை மாநகரில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைக்கப்பட்டது.

இத்திட்டத்தின் வாயிலாக, அரசுப் பள்ளிகளிலும், அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் படித்து 12 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றுக் கல்லூரிகளில் சேரும் ஏறத்தாழ 3 இலட்சத்து 28 ஆயிரம் கல்லூரி மாணவர்கள் மாதந்தோறும் ரூ.1,000/- பெற்றுப் பயனடைகிறார்கள். இந்த மகத்தான திட்டத்திற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசு 360 கோடி ரூபாயை இந்த ஆண்டிற்கு அனுமதித்துள்ளது. பொருளாதார வசதிக் குறைவு உட்பட பல்வேறு காரணங்களால் பள்ளிப் படிப்பிற்குப் பின் உயர்கல்வியைத் தொடர முடியாத நிலையில் இருந்த மாணவர்களுக்கு உயர்கல்வியில் சேர உதவுகிறது.

புதுமைப்பெண் திட்டம் குறித்து மாநில திட்டக் குழுவினால் ஈரோடு, வேலூர், திருவள்ளூர், சென்னை, சிவகங்கை, தென்காசி, விழுப்புரம், திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் 5,095 மாணவிகள் பயிலக்கூடிய 84 அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வு 2023 நவம்பர் முதல் 2024 பிப்ரவரி வரை நடைபெற்றது.

இந்த ஆய்வின் மூலம் நகர்ப்புறங்களில் உள்ள மாணவிகளைவிட கிராமப்புற மாணவிகள் இத்திட்டத்தால் அதிகளவில் பயனடைந்துள்ளனர் என்பதும், பொருளாதாரக் குறைவு காரணமாக படிப்பைத் தொடர முடியாத நிலையில் இருந்த கிராமப்புற மாணவிகள் உயர்கல்வியைத் தொடர்வதற்கு நல்ல வாய்ப்புகளை வழங்கியுள்ளது என்பதும் இத்திட்டப் பயனாளிகளில், பிற்படுத்தப்பட்டட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, மலைவாழ் சமூகங்களைச் சார்ந்தவர்கள் 99.2 சதவீத மாணவிகள் என்பதும் கண்டறியப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுபவர்களில், ஏறத்தாழ 3 சதவீதத்தினர் பெற்றோர் இருவரையும் அல்லது தாய்-தந்தை இருவரில் ஒருவரை இழந்தவர்கள் என்பதுடன் இவர்களில் விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் 27.6 சதவீதத்தினரும், விவசாயம் அல்லாத குடும்பங்களைச் சார்ந்தவர்கள் 39.3 சதவீதத்தினரும் பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்து படிக்கும் வாய்ப்புகளை இத்திட்டத்தினால் பெற்றுள்ளனர் என்பதும் தெரியவந்துள்ளன.

### எண்ணும் எழுத்தும்

1 முதல் 3-ஆம் வகுப்பு வரை பயிலும் 8 வயதிற்குட்பட்ட அனைத்து மாணவர்களும் கற்றலின் அடிப்படைகளான வாசித்தல், எழுதுதல், எண்ணறிவு ஆகியவற்றைக் கற்று அவற்றை உறுதிப்படுத்துவது “எண்ணும் எழுத்தும்” திட்டம். இத்திட்டம் மாணவர்கள் படித்துப் புரிந்து கொண்டு பிழையின்றி எழுத, எண்ண வகை செய்யும் புதிய திட்டமாகும்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 13.6.2022 அன்று தொடங்கிவைத்த இத்திட்டம் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் ஒவ்வொரு குழந்தையும் 2025ஆம் ஆண்டுக்குள் வாசித்தல், எழுதுதல் மற்றும் அடிப்படை எண் கணிதத் திறன்கள் அடைவதை உறுதி செய்யும் திட்டமாகும்.

இத்திட்டம் குறித்த மாநில திட்டக் குழுவின் ஆய்வின் மூலம் தொடக்கக் கல்வியின் தரம் உயர்ந்துள்ளது என தெரியவந்துள்ளது.

மாணவர்கள் வகுப்பறையில் கற்கும் பொழுது ஏற்பட்ட நேர விரயம் நீங்கி குறித்த நேரத்தில் கற்பதற்கு இத்திட்டம் வழிவகுத்துள்ளது ;

பாடத்திட்டத்துடன் உள்ளடக்கத்தைச் சீரமைத்தல், கற்பித்தல் அணுகுமுறைகள், பொருள் உள்ளடக்கம், ஆசிரியர் பயிற்சி, நேர மேலாண்மை மற்றும் மதிப்பீட்டு முறைகள் ஆகியவை மேம்பட்டுள்ளன ;.

இத்திட்டம் ஒவ்வொரு குழந்தைக்கும் அதன் செயலாக்கத்தைச் செம்மைப்படுத்தவும், கல்வித் தரத்தை மேம்படுத்தவும் உதவியுள்ளது என்பதும் தெரியவந்துள்ளன. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் எதிர்கால முன்னேற்றம் கருதி அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்திவரும் இந்த மாபெரும் திட்டங்களால் இளைஞர்கள் மற்றும் மகளிரின் எதிர்காலம் ஒளிமயமாகத் திகழும்; அவர்தம் வாழ்வு எழுச்சி பெறும் !




## மாநில திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்ட

# வரைவுக் கொள்கை ஆவணங்கள் - மதிப்பீட்டாய்வுகள்!

## முதலமைச்சரிடம் – மாநில திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் முனைவர் ஜெ.ஜெயரஞ்சன் சமர்ப்பித்தார்!

சென்னை,டிச.17-

**மாநில திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் முனைவர் ஜெ. ஜெயரஞ்சன் அவர்கள், மாநில திட்ட குழுவால் தயாரிக்கப்பட்ட நான்கு வரைவு கொள்கை ஆவணங்கள் மற்றும் ஐந்து ஆய்வறிக்கைகள் ஆகியவற்றை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் சமர்ப்பித்தார். தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் மற்றும் மாநில திட்டக் குழுவின் அலுவல் சார் துணைத் தலைவர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலர் என். முருகானந்தம், மற்றும் திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் ரமேஷ் சந்த் மீனா, ஆகியோர் உடன் இருந்தனர்.**

மாநில திட்டக் குழுவின் செயல் துணை தலைவர் அவர்கள் முதலமைச்சர் தமிழ்நாடு அவர்களிடம் நான்கு வரைவு கொள்கை, மூன்று முன்னோடி மக்கள் நல திட்டங்களின் மீதான மதிப்பிட்டாய்வுகளையும் மற்றும் இரண்டு ஆய்வறிக்கைளையும் சமர்ப்பித்தார். அதன் விவரம் பின்வருமாறு: 1) தமிழ்நாட்டுக்கான நிலையான நிலப் பயன்பாட்டு கொள்கை( வரைவு), 2) தமிழ்நாடு வேலைவாய்ப்பு கொள்கை 2023 (வரைவு), 3) தமிழ்நாடு மாநில நீர்வளக் கொள்கை (வரைவு) 4)சமூக (தெரு) நாய் மேலாண்மை மற்றும் ஒழுங்குமுறைக்கான வரைவுக் கொள்கை .

முன்னோடி மக்கள் நல திட்டங்களின் மீதான மதிப்பிட்டாய்வுகளின் விவரம் பின்வருமாறு: 1)முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம்: இத்திட்டத்தினால் அரசு தொடக்கப்பள்ளி மாணவர்களிடம் ஏற்படும் தாக்கம்2.)புதுமைப் பெண்திட்டமதிப்பீடு 3) எண்ணும் எழுத்தும் திட்டம் செயலாக்கத்தின் மீதான மதிப்பீட்டு ஆய்வு . மேலும், வரைவு ஆய்வறிக்கைகளான 4) நகர்ப்புற வெப்பத்தீவு தமிழ்நாட்டின் வெப்பப்பகுதிகளின் பகுப்பாய்வு மற்றும் தணிப்பு உத்திகள்” 5.)தமிழ்நாடுவெப்பதணிப்புஅறிக்கை(DCS ) மாநில திட்டக் குழுவின் செயல் துணை தலைவர் அவர்கள் முதலமைச்சர் தமிழ்நாடு அவர்களிடம் சமர்ப்பித்தார். மாநில திட்ட குழுவானது முதலமைச்சர் அவர்கள் தலைமையில் செயல்படும் ஓர் உயர் மட்ட ஆலோசனைக் குழுவாகும். தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் முன்னோடி மக்கள் நல திட்டங்களை மதிப்பீட்டு ஆய்வு செய்தல், அரசு ஆளுகையில் எழும் புதிய தேவைகளுக்கு ஏற்ப கொள்கை முடிவுகளை எடுப்பதிலும், பல்வேறு ஆய்வுகள் நடத்தி அறிக்கை தயாரிப்பதிலும் தனது பங்களிப்பை மாநில திட்ட குழு நல்கி வருகிறது.



**I வரைவு கொள்கை ஆவணங்கள்:**

**1. தமிழ்நாட்டுக்கான நிலையான நிலப் பயன்பாட்டு கொள்கை( வரைவு)**

தமிழ்நாட்டின் நிலையான நிலப் பயன்பாட்டுக் கொள்கையானது, நகரமயமாதல், கால நிலையில் ஏற்படும் மாற்றங்கள், பொருளாதார வளர்ச்சி உள்ளிட்டவற்றை கருத்தில் கொண்டு நீண்டகால நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதையே நோக்கமாக கொண்டுள்ளது. இக்கொள்கையானது தமிழ்நாட்டின் நிலப்பரப்பினை நகர்ப்புற வளர்ச்சிக்கான பகுதி, பாதுகாக்கப்பட வேண்டிய சுற்றுச்சூழலுக்கான பகுதி, வேளாண் நடவடிக்கைகளுக்கான விளைநிலப் பகுதி என வகைப்படுத்தி சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் , வேளாண் நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்கவும் , விரைவாக நகரமயமாக்கும் பகுதிகளை வளர்க்கவும் அறிவுறுத்துகிறது. நிலையான வளர்ச்சி இலக்குகளை, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் காணப்படும் வளங்கள் மற்றும் அவற்றின் பயன்பாடுகளை மேம்பட்ட நிலையான நடைமுறைகள் மூலம் எய்திடும் நோக்கில் சீரமைக்க இக்கொள்கை வலியுறுத்துகிறது. துறை சார் வல்லுநர்களின் அறிவுரைகள் மற்றும் வரையறுக்கப் பட்ட கால இடைவெளியில் நடத்தப்படும் சீராய்வு கூட்டங்கள் வாயிலாக பொறுப்புணர்வு மிக்க வளங்குன்றா நிலப் பயன்பாட்டினை ஊக்குவித்து மாநிலத்தின் சமூக பொருளாதார வளர்ச்சியை முன்னோக்கிய பாதையில் இக்கொள்கையானது எடுத்துச் செல்லும்.

**2.தமிழ்நாடு வேலைவாய்ப்பு கொள்கை 2023**

இந்த கொள்கை ஆவணம், தற்போதைய தொழிலாளர் சந்தையின் பல முக்கியமான சிக்கல்களுக்கான தீர்வுகளை முன் வைக்கிறது. இவற்றில், படித்த இளைஞர்களிடையே அதிக வேலையின்மை விகிதம், கல்வி, திறன் மேம்பாடு, உழைப்பிற்கான உத்வேகம் மற்றும் வேலை வாய்ப்புகள் ஆகியவற்றிற்கு இடையே உள்ள குறிப்பிடத்தக்க பொருத்தமற்ற தன்மை ஆகியன முக்கியமானவைகள் ஆகும். மேலும், பொருத்தமான தீர்வுகளை வகுப்பதற்கான முக்கிய வழிமுறைகளை இந்த கொள்கை ஆவணம் முன் நிறுத்துகிறது. சராசரி வருவாயை உயர்த்துவதற்கும் மற்றும் பொருளாதாரத்தின் துரிதமான வளர்ச்சிக்கும், உற்பத்தி திறன் சார்ந்த வேலைகள் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை இலக்காகக் கொண்ட 10 ஆண்டு செயல் திட்டத்தின் அவசியத்தை இந்த கொள்கை ஆவணம் முன் நிறுத்துகிறது.

**3.தமிழ்நாடு மாநில நீர்வளக் கொள்கை (வரைவு)**

மாநில நீர் மேலாண்மையில் உள்ள சவால்களை எதிர்கொள்ளும் வகையில் பல்நோக்கு அணுகுமுறையுடன் தமிழ்நாடு நீர்வளக் கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளது. அனைவருக்கும் சுத்தமான நீர் கிடைப்பதை உறுதி செய்யவும், நீர்வளங்களை பாதுகாத்து மேம்படுத்தவும், ஆக்கபூர்வமான நீர் பயன்பாட்டிற்காகவும் சிறப்பான உத்திகளை இக்கொள்கை எடுத்துரைக்கிறது. மேலும், தமிழ்நாட்டில் நீர்வளத்தினை மேம்படுத்திட, நீர்வள ஆதார ஆணையம், நீர் கொள்கை ஆராய்ச்சி மையம், ஒருங்கிணைந்த நீர்இருப்பு தகவல் அமைப்பு போன்ற பல முன்னெடுப்புகளை இக்கொள்கை பரிந்துரைக்கிறது.

**4.சமூக (தெரு) நாய் மேலாண்மை மற்றும் ஒழுங்குமுறைக்கான வரைவுக் கொள்கை**

சமூக நாய்களை நிர்வகிப்பதற்கான ஒரு முழுமையான அணுகுமுறையினை இக்கொள்கை கொண்டுள்ளது. மனிதாபிமான கருத்தடை முறைகள், ஒழுங்கமைக்கப்பட்ட தடுப்பூசி திட்டங்கள், கைவிடப்பட்ட நாய்களுக்கான பிரத்யேக தங்குமிடங்கள் நிறுவுதல் போன்ற நிலையான செயல்திட்டங்களை பரிந்துரைக்கிறது. மேலும், வளர்ப்பு நாய்களை பதிவிற்கான விதிகள், நாய்கடிகளை அறிக்கையிடுதல் மற்றும் வணிகரீதியலான நாய் இனப்பெருக்க நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல் ஆகிய பரிந்துரைகளும் இடம்பெற்றுள்ளன. பொது சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், மனிதர்களுக்கும் நாய்களுக்கும் இடையில் இணக்கமான சூழலை உருவாக்கும் நோக்குடன் இக்கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளது.

**II.மதிப்பீட்டுஆய்வுகள் / ஆய்வறிக்கைகள்**

**1. முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம்: இத்திட்டத்தினால் அரசு தொடக்கப்பள்ளி மாணவர்களிடம் ஏற்படும் தாக்கம்**

இந்த ஆய்வின் இரண்டாம் கட்ட இடைநிலை அறிக்கையானது, இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்று வரும் மாணவர்களின் கல்வி மற்றும் உடல்செயல்பாடுகளில் ஏற்பட்ட தாக்கம் குறித்து, இவ்வாண்டு ஜூன் மாதம் நடத்தப்பட்ட மதிப்பீட்டையும், கடந்த 2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடத்தப்பட்ட அடிப்படைஆய்வு மதிப்பீட்டையும் ஒப்பீட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை நடப்பு கல்வியாண்டில் புதிதாக சேர்க்கப்பட்ட மாணவர்களின் மதிப்பீட்டையும் உள்ளடக்கியுள்ளது.

**2. புதுமைப்பெண் திட்ட மதிப்பீடு**

இந்த ஆய்வு, இத்திட்டத்தின் செயல்பாடு, சவால்கள், மாணவிகளின் விழிப்புணர்வு நிலை, திட்ட உதவியின் பயன்பாட்டு முறைகள், கல்லூரி மாணவியர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் இடையே புதுமைப்பெண் திட்டம் ஏற்படுத்திய சமூக பொருளாதார தாக்கங்கள் ஆகியவற்றை மதிப்பீடு செய்வதாகும். இத்திட்டம் சமூக பொருளாதார வகையில் விளிம்பு நிலையிலுள்ள சமூகத்தைச் சார்ந்த மாணவிகளுக்கு உயர்கல்வி பெற பெரிதும் உதவிபுரிந்துள்ளது.

**3. எண்ணும் எழுத்தும் திட்டம் செயலாக்கத்தின் மீதான மதிப்பீட்டு ஆய்வு**

இந்த மதிப்பீட்டு ஆய்வில், துவக்கக்கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வரும் ““எண்ணும் எழுத்தும்” திட்டத்தின் நடைமுறை செயல்பாடுகள் ஆழ்ந்து மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் செயல்பாடுகள் தொடர்பான தரவுகளைப் பெற்றும், ஆசிரியர் பயிற்றுநர்களுடன் நேர்காணல்கள் மேற்கொண்டும், இத்திட்டத்தின் விளைவு இந்த ஆய்வில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த மதிப்பீட்டு ஆய்வு, எண்ணும் எழுத்தும் திட்டத்தின் செயலாக்கத்தை செம்மைப்படுத்துவதையும் மற்றும் ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வியின் பயனை அதிகப்படுத்துவதையும் குறிக்கோள்களாகக் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டிய விரிவான மறு ஆய்விற்கான அடித்தளத்தை வழங்குகிறது.

**4.நகர்ப்புற வெப்பத்தீவு தமிழ்நாட்டின் வெப்பப்பகுதிகளின் பகுப்பாய்வு மற்றும் தணிப்பு உத்திகள்”**

இந்த அறிக்கையானது, நகர்புற வெப்பதீவு விளைவுகளை மதிப்பீடு செய்ய மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவுகளை தெரிவிக்கிறது. தமிழ்நாடு முழுவதும் உள்ள வெப்பமண்டலங்களை கண்டறிந்து வெப்பப்பகுதிகளை அடையாளம் காணவும், நகரமயமாதலால் மற்றும் கால நிலை மாற்றத்தால் அதிகரித்து வரும் வெப்பத்தின் தாக்கத்தை புரிந்து கொள்ளவும் உதவுகிறது. நகர்ப்புற வெப்ப தாக்கங்கள், தமிழ்நாட்டிற்கென வடிவமைக்கப்பட்ட செயல்படுத்தக்கூடிய தணிப்பு உத்திகள் மற்றும் நிலையான நகர்ப்புற திட்டமிடலை இந்த அறிக்கை வலியுறுத்துகிறது.

**5. தமிழ்நாடு வெப்பதணிப்பு அறிக்கை (DCS)**

தமிழ்நாட்டில் கோடைகாலமான மார்ச் முதல் ஆகஸ்ட் மாதங்களில் வெப்ப அலை வீச்சின் காரணமாக அதிகப்படியான வெயிலின் தாக்கத்தினை சந்தித்து வருகின்றது. மனிதர்களின் வாழ்விடங்களிலும், பணிபுரியும் அலுவலகம் தொழிற்சாலை உள்ளிட்ட இடங்களிலும் உடல் மற்றும் உள நலனுக்கு ஊறு விளைவிக்காத வகையில் வெப்பத்தணிப்பு செய்யப்பட வேண்டியது அவசியமானதாகும். இந்த அறிக்கையானது, குளிர்விக்கும் தொழில்நுட்பம் வழங்க்கும் முதலீட்டாளர்கள் மற்றும் நிதி சேவையில் உள்ள நிறுவனங்களுக்கு உதவும் வகையில் அளிக்கும் வகையில் வணிக ரீதியான மற்றும் நிதி சார் மாதிரிகளையும் கொண்டுள்ளது.மாநில திட்ட குழுவால் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கையானது, வெப்ப தணிப்பு முறைகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் ஒழுங்குமுறை படுத்துதல் உள்ளிட்ட முன்னெடுப்புகளை முன்மொழிகிறது. தமிழ்நாடுவெப்பதணிப்புஅறிக்கைவ் (DCS) முன்னெடுப்புக்கென மாநில திட்ட அறிக்கை குறுகிய, நடுத்தர நீண்டகால உத்திகளுடன், அரசு துறைகளில் பொறுப்புகள் மற்றும் பங்களிப்பு விவரங்களுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.